**சார்வரி ஆண்டு (ஆணி 19) ஜுலை 03.07..2020 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற அவசர கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திரு.ஆர்.முத்துக்குமார்., மேலாளர் (ம) ஆணையர் ((மு.கூ.பொ) மற்றும் தனி அலுவலர்**

| நாள் | பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 03.07.2020 | **பொருள் எண்.01**<br><br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020–2021 ன்கீழ் தார் சாலை அமைக்கும் பணிகளுக்கு ரூ.150.00 இலட்சத்திற்கு ஒரு சிப்பமாக 18 பணிகள் மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் திட்டப்பணிக்குண்டான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதற்கு நிர்வாக அனுமதி பெறவும், மதிப்பீட்டு தொகையினை 75% சதவீதம் மானியமாகவும் மீதமுள்ள 25% சதவீதத்தினை நகராட்சியின் பங்களிப்பாகவும் வழஙகுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>மன்றம் அனுமதி வழஙகலாம்.<br><br>ந.க.எண்.1509/2020/இ1 | 41<br>அனுமதிக்கப்பட்டது |

இடம் : திருவாரூர்
நாள் : 03.07.2020

(ஒம்) ரெ.முத்துக்குமார்
ஆணையர்/தனி அலுவலர்,
திருவாரூர் நகராட்சி.

**சார்வரி ஆண்டு (ஆனி 31 ) ஜூலை 15.07..2020 ம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற அவசர கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திரு.ஆர்.முத்துக்குமார்., மேலாளர் (ம)**

**ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் தனி அலுவலர்**

| நாள் | பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 15.07.2020 | திருவாரூர் நகராட்சி பகுதியில் மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள கீழ்காணும் சாலைகளை சீரமைக்க ரூ.150.00 இலட்சம் நிதி தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2020–21 ன்கீழ் செய்துதர கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் அனுப்பி வைக்கப்பட்டது. | 42.<br>அனுமதிக்கப்பட்டது |

| வ. எ ண் | வார்டு எண் | பணியின் விவரம்(தார்சாலை பணிகள்) | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|---|
| **சிப்பம் – 1** | | | | | |
| 1 | 12 | கீழ வடம்போக்கி தெரு | 0.190 | 9.00 | 150.00 |
| 2 | 29 | பெரிய மில் தெரு | 0.300 | 4.00 | |
| 3 | 04 | ஹவுஸிங யுனிட் | 0.350 | 4.00 | |
| 4 | 04 | சாது சுப்பையா நகர் | 0.135 | 4.00 | |
| 5 | 04 | தென்றல் நகர் | 0.160 | 4.00 | |
| 6 | 11 | வாசன் நகர் | 0.628 | 4.00 | |
| 7 | 27 | திலகர் முதல் தெரு | 0.124 | 4.00 | |
| 8 | 27 | ஐ.பி. கோவில் தெற்கு தெரு | 0.405 | 4.00 | |
| 9 | 15 | வி.எஸ்.டீ தெரு | 0.246 | 4.00 | |
| 10 | 28 | குரு நகர் | 0.374 | 4.00 | |
| 11 | 30 | வன்மீகப்புரம் | 0.252 | 4.00 | |
| 12 | 03 | ராஜா தெரு | 0.080 | 4.00 | |
| 13 | 05 | கீழ காவாதக்குடி | 0.060 | 4.00 | |
| 14 | 06 | ஈ.வி.எஸ் நகர் | 0.310 | 4.00 | |
| 15 | 06 | கப்பல் நகர் | 0.055 | 4.00 | |
| 16 | 06 | பெரியார் தெரு | 0.101 | 4.00 | |
| 17 | 04 | தென்றல் நகர் மெயின் ரோடு | 0.400 | 4.00 | |
| 18 | 01 | நரசிம்ம தோப்பு (மெய்பொருள் நகர்) | 0.100 | 4.00 | |
| | | **மொத்தம்** | **4.270** | | |

நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் கடித ந.க.எண்.17349/2019/இ3 நாள்.14.07.2020 இல் மேற்படி பணிகளை கீழ்காணும் நிதி ஆதார அமைப்பில் (Funding Pattern) மேற்கொள்ள TURIP-2020–21 க்கான திட்ட அனுமதி வழங்கும் குழு அனுமதியளித்துள்ளதாகவும், இதற்கு ஏற்புடையதாயின் சாலை பணிகளை மேற்கொள்ள நகர மன்ற அனுமதி பெற்று நிர்வாக அனுமதிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலை உட்கட்டமைப்பு திட்ட மானிய நிதி | நகராட்சி பங்களிப்பு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| திருவாரூர் | 150.00 | 112.50 | 37.50 |

எனவே, மேற்காணும் நிதி ஆதார அடிப்படையில் சாலை பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:-** மன்றம் அனுமதி வழஙகலாம்.

**ந.க.எண். இ1 / 1509 / 2020**

இடம் : திருவாரூர்

நாள் : 15.07.2020

(ஒம்) ரெ.முத்துக்குமார்

ஆணையர்/தனி அலுவலர்,

**திருவாரூர் நகராட்சி.**

**சார்வரி ஆண்டு (ஆடி 16) ஜுலை 31.07.2020 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திருவாரூர் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும் அப்பொழுது கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**

**முன்னிலை: திரு.ஆர்.முத்துக்குமார்., மேலாளர் (ம)**

**ஆணையர் (மு.கூ.பொ) மற்றும் தனி அலுவலர்**

| நாள் | பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 31.07.2020 | பொருள் :01<br>இந்நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர் அவர்களின் ஜீன் 2020ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>மன்றம் பதிவு செய்யலாம். | 43.<br>பதிவு செய்யப்பட்டது |
| | பொருள் : 02<br>இந்நகராட்சி பகுதியில் வார்டு 3 பிளாக் 6 நகரளவு எண்.203/2ல் கட்டுப்பட்ட 2243.50 சதுர மீட்டர் பரப்பளவில் உத்தேச குடியிருப்பு மனைப்பிவிற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.150/2020/தம3, நாள்.19.05.2020ன்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கிட சாலை, பூங்கா மற்றும் மூலை முடக்குகள் தானபத்திரம் மூலம் கிரயம் பெற தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி ஆணையர் பெயரில் தானசாசனம் வழியாக பதிவு செய்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.4446/2019/எப்1. | 44.<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 03<br>இந்நகராட்சி பகுதியில் வார்டு 4 பிளாக் 11 நகரளவு எண்.644/2, 645/17ல் (சுந்தரவிளாகம்) 76424.40 சதுர அடி பரப்பளவில் அமையும் அனுமதியற்ற மனைபிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் வழங்க நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.369/2020/தம3, நாள்.16.03.2020 கடிதத்தின்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கிட சாலை, பூங்கா மற்றும் மூலை முடக்குகள் தானபத்திரம் மூலம் கிரயம் பெற தெரிவிக்கப்பட்டுள்ளதால், நகராட்சி ஆணையர் பெயரில் தானசாசனம் வழியாக பதிவு செய்ய்ப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் ஒப்புதல் வழங்கலாம்<br>ந.க.எண்.1180/2020/எப்1. | 45,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 04<br>திருவாரூர் நகராட்சி வார்டு எண்.2 பிளாக் 18, நகளவு எண். 914/1 ல் 3156 .052 சதுர மீட்டர் பரப்பளவில் உத்தேசித்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் எண்.3194/2019 தம2 நாள் 14.07.2020 ன் படி தொழில் நுட்ப அனுமதியும் மனைபிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.து.இ(கு.ம) எண்.40/2020 எணணிட்டு ஒப்புதலும் வழஙகப்பட்டுள்ளது. எனவே நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் உத்தரவில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்படுத்தி மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழஙகலாம்.<br>அலுவலக குறிப்பு..<br>மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.<br>ந.க.எண்.4625/2019எப்1. | 46,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 05<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான சந்தைப்பேட்டைக்கு அருகாமையில் உள்ள கட்டண கழிப்பறையானது மிகவும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உளளதனால் அதனை இடித்துவிட்டு புதியதாக கட்டண கழிப்பறை | 47,<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | கட்டும் பணிக்கு இந்நகமன்ற தீமான எண்.31 நாள்.31.05.2019 அன்று பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடந்து மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் அப்பகுதியில் மார்கெட், அங்காடிகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அதிகளவில் பொதுமக்கள் வருகை புரிவதால் தற்போது கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் புதிய கழிவறையில் போதுமான அறைகள் வசதியில்லாத காரணத்தினாலும் மற்றும் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் கூடுதலாக புதிய கட்டண கழிவறை அமைத்துதர அப்பகுதி வணிக நிறுவனங்களின் மூலம் கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே, மேற்காணும் வணிக நிறுவனத்தாரர்களின் கோரிக்கையினை ஏற்று அவ்விடத்தில் கூடுதலாக புதிய கட்டண கழிவறை அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான மதிப்பீட்டுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், திட்டப்பணிகளில் நிதி ஒதுக்குடு செய்யும் பட்சத்தில் ஈடு செய்துக் கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலம்.<br>ந.க.எண்.2339/2019/இ1 | |
| | பொருள் : 06<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினை தொடர்ந்து கீழ் கண்ட இடங்களில் கழிவுநீர் வெளியேறும் குழய்களின் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதன்விபரம் பின்வருமாறு.<br>வ.எண். தெருக்களின் விபரம்<br>1. மஜித்தோப்பு<br>2. மேட்டுப்பாளையம் பெரியார் தெரு.<br>3. வடக்கு வடம்போக்கித் தெரு<br>4. முடுக்குத் தெரு<br>5. துர்காலயா ரோடு<br>6. கண்ணாரத் தெரு, மடப்புரம்<br>7. கேக்கரை பிரதான குழாய்<br>8. மடப்புரம் சபாபதி முதலியார் தெரு<br>9. குளுந்தான் குளம் கீழ்கரை<br><br>மேற்காணும் இடங்களில் ஏற்பட்டுள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீ குழாய் உடைப்பினை சீர்செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் குடிநீர் மற்றும் பாதாளச்சாக்கடை நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | 48,<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

பொருள் : 07

49, அனுமதிக்கப்பட்டது

இந்நகராட்சிக்கு சொந்தமான தாழை. மு. கருணாநிதி வணிகவளாகம் முழுமையாக இடிக்கப்பட்டது தொடர்ந்து பதுகாப்பு நலன் கருதி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு இந்நகர்மன்றத்தில் நகர்மன்றத் தீர்மானம் எண்.135 நாள்.31.12.2019ல் பணியினை மேற்பொள்ள அனுமதி அளிக்கப்பட்டதனைத் தொடர்ந்து 19.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. அதன்விபரம் வின்வருமாறு.

| வண் | ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிரூ. | மதிப்பீ விலைவி |
|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ். தணிகாசலம் | ரூ.12.00.000/- | ரூ. 10,10,875.83 | 0.07% மதிப்பீ விட குறைவு |
| 2. | திரு. எஸ். ரெங்கசாமி | ரூ.10,11,629.88 | ரூ. 10,22,330.19 | 1.06% மதிப்பீ விட அதிகம் |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எஸ். தணிகாசலம் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளி 0.07% னை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

ந.க.எண்.4127/2018/இ1

பொருள் : 08

50, அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் நோயினை தடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கையாக புதிய பேருந்து நிலையத்தின் தெற்கு பகுதியில் தற்காலிகமாக காய்கறி சந்தைக்கு வருகைப்புரியும் பொது மக்களிடையே சடக இடைவெளியினை தோற்றுவிக்கும் நோக்கில் தகரசீட்டுகளை கொண்டு தடுப்புகள் அமைத்தல், பெயர் பலகைகள் அமைத்தல் மற்றும் சிண்டெக்ஸ் டேங்க் பொருத்தி கையினை கழுவும் வசதிகள் செய்யப்பட்டது. மேற்காணும் பணிக்குண்டான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சமாகும். மேற்கண்ட பணிக்கு 20.05.2020 அன்று குறுகிய கால விலைப்புள்ளி கோரப்பட்டதை தொடர்ந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு.

| எண். | விலைப்புள்ளி தாரர்களின் விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.) | வரப்பெற்ற மதிப்பீட்டு தொகை (ரூ.) | மதிப்பீட் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | பி.கே.எம். பில்டர்ஸ், திருவாரூர் | 85676 | 85570 | மதிப்பீட்டை 0.12% குறை |
| 2. | கே. செந்தில் குமார், திருவாரூர் | 85676 | 87350 | மதிப்பீட்டை 1.95% அதிகம் |
| 2. | மெர்சஸ் குமார் கான்கெர், திருவாரூர் | 85676 | 86075 | மதிப்பீட்டை 0.47% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ். பி.கே.எம் பில்டர்ஸ், திருவாரூர் என்பவரின் விலைப்புள்ளி 0.12% மதிப்பீட்டை விட குறைவாக

| | | |
|---|---|---|
| | வழங்கப்பட்டுள்ளதை ஏற்றும் மற்றும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிவு 15ன் கீழ் போர்கால அடிப்படையில் பணியினை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை மன்றத்திற்கு தெவித்துக்கொள்ளப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு போர்கால அடிப்படையில் பணியினை தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் பணியினை மேற்கொள்ளப்பட்டதனையும் மன்றம் அங்கிகரிக்கலாம்.<br>3. மேற்கண்ட பணியினை மதிப்பீட்டை விட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள மெர்சஸ், பி.கே.எம் பில்டர்ஸ், திருவாரூர் என்பவரின் குறைந்த விலைப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றம் அங்கிகரிக்கலாம்.<br>4. மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகையினை அரசினால் “கொரோனா வைரஸ்” தடுப்பு நடவடிக்கைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1314/2020/இ1 | |
| | பொருள் : 09<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான பாதாளச்சாக்கடை கழிவுநீர் அடைப்பு வாகனம் எண். டி.என்.50 பி 0253 ஆனது பழுதடைந்து முற்றிலும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதனை பராமரிப்புப்பணிகள் மேற்கொண்டு இயக்குவதற்கு ஏதுவாக ஆகும் பராமரிப்பு கட்டணம் ரூ.5.25 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பராமரிப்பு கட்டணத் தொகையினை பாதாளச் சாக்கடை திட்ட கணக்கிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1272/2020/இ1 | 51,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 10<br>திருவாரூ நகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஈப்பு வாகனம் TN 50 C 0541 ஆனது 09.12.2002-ம் ஆண்டு வாங்கப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டு வந்தது. மேற்படி வாகனம் இதுவரை 428042 கி.மீ. கடந்துள்ளது. இவ்வாகனம் அரசாணை(நிலை) எண். 2275 உள் (போ.வ-இ) துறை நாள்.10.10.1990ன் படி நிர்ணயித்த காலமும் மற்றும் தூரமும் கடந்துவிட்டபடியால் இயல்புநிலையில் கழிவினம் செய்ய பொறியாளலர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களுக்கு உரிய பிரேனணை அனுப்பப்பட்டது. மேற்படி வாகனத்தினை பொறியாளர், அரசு தானியங்கி பணிமனை, தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ5/983/2017 நாள்.18.12.2017ல் சென்னை தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு இயல்புநிலை கழிவுசெய்ய அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>மேற்காணும் வாகனத்தினை இயல்பு நிலை கழிவு செய்வதற்குண்டான உரிய அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை பொது ஏலம் விடவும், புதியதாக ஈப்பு வாகனம் வாங்கவும் மற்றும் அதற்குண்டான இதர செலவினங்கள் மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு இந்நகர் மன்றத் தீமானம் எண்.774 நாள்.24.01.2018ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>மேலும் தற்போது வாகனங்களிலிருந்து வெளியறும் நச்சுப்புகையினால் காற்று மாசுப்படுவதனை தவிர்த்திடும் நோக்கிலும் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கிலும் மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து வழங்கப்பட்ட அரசின் உத்தரவிற்கிணங்க 01.04.2020 | 52,<br>அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | முதல் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகையான வாகனங்களும் பிஎஸ் IV தரத்திலிருந்து பிஎஸ் VI தர தொழில்நுட்ப உடையதாக தயார் செய்து நடைமுறைப்படுத்த வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து அனைத்து வகையான வாகனங்களின் விலையும் ஏற்றமுடையதாக உள்ளதால் தற்போதைய மார்கெட் விலை நிலவரப்படி BOLERO ZLXAC PSBS6 புதிய ஈப்பு வாகனத்தினை வாங்குவதற்கு ஏதுவான கூடுதல் தொகையினை சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மேற்படி ஈப்பு வாகனம் எண்.டி.எண். 50சி 0541 இயல்வு நிலை கழிவு செய்ய உரிய அனுமதி பெறப்பட்ட பின்னர் பொது ஏலம்விட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. புதியதாக ஈப்பு வாகனம் மகேந்திரா அன்ட் மகேந்திரா நிறுவனத்தின் மூலம் வாங்கி கொள்ளவும், வாகனத்திற்கு செலுத்த வேண்டிய காப்பீடு தொகை, பசுமை வரி, சாலை வரி, வாகனப்பதிவு செலவினம் மற்றும் இதர செலவினங்கள் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்தினை நகராட்சியின் பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி கோரி பிரேனணை அனுப்புவதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.630/2017/இ2 | |
| | பொருள் : 11<br>திருவாரூர் நகராட்சியில் இரண்டு ஈப்பு வாகனங்கள் பயன்படுத்தி வரப்பெற்றதில் ஒரு ஈப்பு வாகனம் TN 50C 0541 ஆனது 09.12.2002 ஆண்டு வாங்கப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தி வரப்பட்டதனை இயல்பு நிலை கழிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது ஒரு ஈப்பு வாகனம் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகரின் சுற்றளவு 10.47 சதுர.கி.மீ. ஆகும். இந்நகராட்சியானது 30 வார்டுகளை அடங்கியதாகும். இந்நகரில் குடிநீர் விநியோகம், பாதாளச்சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், கழிவுநீர் வீட்டு இணைப்பு பணிகள் மற்றும் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும், திட்டப்பணிகளை ஆய்வு செய்ய வேண்டியுள்ளதாலும், திட்டப்பணிகளை குறித்து அவ்வப்போது ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய நிலை உள்ளது. எனவே புதிய ஈப்பு வாகனம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் **ரூ.7.62** இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>இந்நகராட்சிக்கு புதியதாக ஈப்பு வாகனம் ரூ.7.62 இலட்சத்தில் வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி அனுமதிபெற்று வாங்கி பயன்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.630/2017/இ2 | 53,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 12<br>திருவாரூர் நகராட்சியில் இரண்டு ஈப்பு வாகனங்கள் பயன்படுத்தி வரப்பெற்றதில் ஒரு ஈப்பு வாகனம் TN 50C 0541 ஆனது 09.12.2002 ஆண்டு வாங்கப்பட்டு கடந்த 15 ஆண்டுகளாக பயன்படுத்தி வரப்பட்டதனை இயல்பு நிலை கழிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், தற்போது ஒரு ஈப்பு வாகனம் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகரின் சுற்றளவு 10.47 சதுர.கி.மீ. ஆகும். இந்நகராட்சியானது 30 வார்டுகளை அடங்கியதாகும். இந்நகரில் குடிநீர் விநியோகம், பாதாளச்சாக்கடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள், கழிவுநீர் வீட்டு இணைப்பு பணிகள் மற்றும் திட்டப்பணிகள் நடைபெற்று வருவதாலும், திட்டப்பணிகளை ஆய்வு செய்ய வேண்டியுள்ளதாலும், திட்டப்பணிகளை குறித்து அவ்வப்போது ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய நிலை உள்ளது எனவே புதிய ஈப்பு வாகனம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் **ரூ.7.62** இலட்சத்தினை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்வதற்கு | 54,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையர் அவகளுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி வாகனத்திற்குரிய பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் இதர செலவினங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட புதிய ஈப்பு வாகனத்திற்கு உண்டான இதரக் கட்டணங்களான பதிவு கட்டணம், சாலை வரி மற்றும் இதர செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். | |
| | பொருள் : 13<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 மடவடியார் தெருவில் உள்ள சிமெண்ட் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் மழைக்காலங்களில் நீர்தேங்கியுள்ளதால் பொதுமக்கள் அவ்வழியாக செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதியும் மற்றும் பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு..<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீட்டு தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருநது மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2163/2020/இ1 | 55,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள் : 14<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.09 கேக்கரைப்பகுதியில் அமைந்துள்ள பாதாளச்சாக்கடை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை தமிழ்நாடு குடிநீ வடிகால் வாரியத்தின் மூலம் 01.06.2015 முதல் 31.05.2020 வரை இயக்குதல் மற்றும் பராமத்தல் பணி நடைபெற்று வருகிறது. மேற்காணும் பணியானது 31.05.2020ல் முடிவு பெறவுள்ளதால் அதனை நகராட்சியின் மூலம் பராமரிப்பு செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத நிலையில் உள்ளது. எனவே மேற்கண்ட பணியினை தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிமேற்கொள்ள ஏதுவாக உரிய நிபந்தனைகளுடன் மூன்றாண்டுகளுக்கு வருட வாரியாக உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.<br>வ.எண் \| ஆண்டு விபரம் \| மதிப்பீடு ரூ. இலட்சத்தில்<br>1. \| முதலாம் ஆண்டு (01.09.2020 முதல் 31.08.2020) \| 35.00<br>2. \| இரண்டாம் ஆண்டு (01.09.2021 முதல் 31.08.2022) \| 36.75<br>3. \| மூன்றாம் ஆண்டு (01.09.2022 முதல் 31.08.2023) \| 38.59<br>மேற்காணும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி வழங்க கோரி அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.999/2020/இ1 | 56,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | பொருள்..15<br>மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாக மாவட்ட விளையாட்டு அரங்கில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரதின விழா அனைத்துத்துறை அலுவலர்களுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது. அதனைப்பேன்றே இவ்வாண்டும் வருகின்ற 74வது சுதந்திர தின விழா 2020 ஆகஸ்ட் 15ம் நாளன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் ஒருங்கிணைத்து சிறப்பாக நடைபெறுவதனை முன்னிட்டு விழாவிற்கு வருகைப்புரியும் அலுவலர்கள், மாணவர்கள் மற்றும் பார்வையிட வரும் பொது மக்கள் வசதிக்காக திருவாரூர் நகராட்சியின் சார்பாக ஒவ்வொரு ஆண்டும் விழா நடைபெறும் மைதானத்தைச் சுத்தப்படுத்துதல் தேவையான பொது மக்கள் தகவல் தொடர்பு மையம் ஏற்படுத்துதல், தணியார் டேங்கர் லாரி மூலம் குடிநீர் வசதி மற்றும் தற்காலிக கழிவறைகள் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.70,000/- மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோர அறிவிப்பு தயார் செய்யப்பட்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>3. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எ /2020/இ1. | 57,<br>அனுமதிக்கப்பட்டது |
| | பொருள்.16<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான ஆணையர் குடியிருப்பு மற்றும் பொறியாளர் குடியிருப்பானது கட்டப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டப்படியால் மேற்காணும் குடியிருப்பு முழுவதும் பழுதடைந்து தங்குவதற்கு இயலாத நிலையில் உள்ளது. அகையால் இந்நகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு கட்டிடங்களை சீர் செய்தல் மிற்றும் பராமரித்தல் செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:-<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பராமரிப்பு மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். /2020/இ1 | 58,<br>அனுமதிக்கப்பட்டது |

இடம் : திருவாரூர்
நாள் : **31.07.2020**

(ஒம்) ரெ.முத்துக்குமார்
ஆணையர்/தனி அலுவலர்,
**திருவாரூர் நகராட்சி.**